கை கொடுக்கும் செல்வம் கல்வி

பாகம் - 2



ஆசிரியர்

ஆசிரியரின் அற்புதங்கள் :

ஆசிரியர்கள் பலவகையுண்டு! ஆம்! எல்லோருக்கும் முதல் ஆசிரியர் அம்மா, அப்பாதான்! அடுத்து ஆரம்பப்பள்ளி ஆசிரியர், நூலாசிரியர்; இதழாசிரியர் எனலாம். அவர்களுக்கு தெரிந்ததை நமக்கு போதிக்கிறார்கள். அமெரிக்காவை அனைவரும் பணக்கார நாடு என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அங்கும் வறுமை உண்டு. 1962-இல் இதை உலகுக்கு அறிவித்தார். 'த அதர் அமெரிக்கா' என்ற நூலின் ஆசிரியர். இதையடுத்து வறுமைக்கு எத்தனை போரை 1964 ஜனவரி 8-இல் அறிவித்தார் அதிபர் லிண்டன் ஜான்சன். விளைவு, கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ சேவை அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டது. ஆசிரியரின் அற்புதங்களில் இதுவும் ஒன்று.

பள்ளியில் சேர்ந்து படிப்போம்!

ஜூலை 28, உலக கல்விப் புரட்சி தினம். மனிதனுக்குள் மறைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துபவர் பள்ளி - ஆசிரியர்! அறிவு வளர்ச்சிக்கு சிறந்த வழிகாட்டி அவர்தான்! கொடுத்தால் குறையாத ஒரே செல்வம், கல்விச் செல்வம்! அந்த செல்வத்தை வாரி வழங்குபவர் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்! ஒரு

ஆசிரியர் நினைத்தால் உங்களை சொர்க்கத்தும் அனுப்ப முடியும்; நரகத்துக்கும் அனுப்ப முடியும். பறிக்காத பூவும், உரிய காலத்தில் கற்காத கல்வியும் பயன் தராது. விலை மதிப்பில்லாத கல்வியை வீட்டில் பெற்றோரிடமும், அதிகம் பயில பள்ளியிலும் சேர்ந்து படிப்போம்!

ஆசிரியர்களுக்கு ஐக்யூ

கல்வி என்பது பயிலுதல், புரிந்துக் கொள்ளுதல், செயல்வழிக் கற்றல், கற்றதை பகிர்ந்து கொள்ளுதல் இந்த நான்கையும் சேர்த்து போதிப்பவர்தான் சிறந்த ஆசிரியர்.

படிப்பதைப் பொருத்துத்தான் அறிவுத்திறன், புத்திசாலித் தனம் கூடுகிறது. இதைத்தான் 'ஐ க்யூ' என்று அளக்கப் படுகிறது. சாதாரண மனிதர்களை விட ஆசிரியர்களுக்கு 'ஐ க்யூ' அதிகமாக இருக்கும், இருக்க வேண்டும். வாழ்க்கைக்குப் பயிற்சி பெறுவது கல்வியின் நோக்கம். இந்த நோக்கத்தை பூர்த்தி செய்பவர் ஆசிரியர்.

அர்த்த சாஸ்திர ஆசிரியர்

மக்களின் பல்கலைக் கழகம் - பத்திரிகைகள். 'தினத்தந்தி', பத்திரிகை மூலம், தமிழ்நாட்டில் சிறந்த ஆசிரியராக ஆதித்தனார் விளங்கினார். மக்களுக்கு படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தினார். கி.மு. 350 க்கு 275க்கும் இடையே வாழ்ந்தவர் சாணக்கியர். சிறந்த கல்வியாளர் மட்டுமல்ல, சிறந்த ஆசிரியரும் கூட. பொருளாதாரம், அரசு நிர்வாகம், வர்த்தகம், நிதி மேலாண்மை என பல்வேறு துறைகள் குறித்து தனது 'அர்த்த சாஸ்திரம்' என்ற நூலில் இந்த ஆசிரியர் கூறியுள்ளார்.

ஆசிரியரும் ஒரு ஞானி

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், சிறந்த ஆசிரியர். "நான் மாணவர் களுக்கு கல்வி கற்பிப்பதில்லை. கற்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறேன்" என்றார். இது மற்ற ஆசரியர்களுக்கும் பொருந்தும். ஆசிரியர்கள் தங்களது போதிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ள, தொடர்ந்து படிக்க வேண்டும். நன்கு கற்ற ஆசிரியர்களால்தான், ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். அறிந்தவனும் ஞானி, துறந்தவனும் ஞானி. அந்த வகையில் ஆசிரியரும் ஒரு ஞானிதான்."

தகுதியான ஆசிரியர்

ஆண்டுதோறும் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பிளஸ் - 2 முடித்துவிட்டு வெளியே வருகிறார்கள். அவர்கள் பொறியியல் படிப்பதற்கு தேவையான கல்லூரிகள் உள்ளன. ஆனால், தரமான கல்லூரிகள் இல்லை. காரணம் தகுதியான ஆசிரியர்கள் அங்கு இல்லை. படித்து விட்டு திறமை இல்லாததால் வேலை இல்லாமல் 'சும்மா' இருக்கிறார்கள்.

நல்லாசிரியர் விருது

"ஒரு நாட்டின் முன்னேற்றம் ஆசிரியரிடம் இல்லை. நல்லாசிரியர்கள் கையில்தான் உள்ளது. தரமான கல்விதான் மனிதர்களை உருவாக்கும்" என்றார். தேசிய அளவில் நல்லாசிரியர் விருது பெற்ற சென்னை அலெக்சாண்டரா கலைச் செல்வி. ஒரு அரசாங்கம் ஆயிரம் அதிகாரிகளை உருவாக்கும். ஆனால், ஒரு சிந்தனையாளனை உருவாக்க முடியாது. முதலில் ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு சிந்தனையாளராகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் அவரால் பல சிந்தனையாளர்களை உருவாக்க முடியும். பிப்ரவரி 22 உலக சிந்தனையாளர்கள் நாள். மெல்போர்ன் நகரில் சர்வதேச அளவில் 'புதிய கல்விச் சிந்தனை' கொண்டவர்களின் கருத்தரங்கம் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

நகைச்சுவையுடன் பாடம்

ஆசிரியர்கள் பாடத்தோடு நின்று விடாமல், 'பொது அறிவையும்' மாணவர்களுக்கு சொல்லித்தர வேண்டும். அறியாமையில் வாழும் மக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்ட கல்விதான் ஒரே வழி. இல்லையென்றால், மழைக்கு, மரத்தை நட்டு வளர்க்காமல், கழுதைக்கும், கழுதைக்கும் கல்யாணம் செய்து அறியாமையில் மூழ்கி கிடப்பார்கள்! நகைச்சுவையும், சிரிப்பும் கலந்து ஆசிரியர்கள் பாடம் நடத்த வேண்டும். இதனால் மாணவர்கள் முகம் சூரிய ஒளி போல பிரகாசமாக இருக்கும். மூளையில் 'எண்டோர்பின்ஸ்' என்ற திரவம் சுரந்து மூளையை சுறுசுறுப்பாக்கும்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்

பொதுவாக குழந்தைகள்தான் புத்தகங்களை கிழிக்கும். ஆனால், இன்றைய கல்விமுறை, புத்தகங்கள் குழந்தை மனதை கிழித்துவிடுகின்றன. இதை ஆசிரியர்கள் புரிந்துகொண்டு புரியும்படி நடத்த வேண்டும். புட்டிப்பாலாக இல்லாமல், பசும்பாலாக இல்லாமல் தங்கள் சொந்த அனுபவம் மூலம், 'தாய்ப்போல்' போல ஆசிரியர் கற்றுக் கொடுக்க வேண்டும். உறுதியான அடித்தளமில்லாத மாளிகை உருக்குலைந்து போகும். ஆரம்பப் பள்ளியும் அப்படித்தான். உண்மையில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குத்தான் அதிக சம்பளம் தரவேண்டும்! சில நாடுகள் இப்படி செய்கின்றன.

பிரகாசமான ஆசிரியர்

கல்வியின் பரந்த நோக்கம், குழந்தைகளை சிந்திக்கத் தூண்டுவதே என்றார் அறிஞர் கிரேன். ஆசிரியர்களின் சொல்லும் செயலும் குழந்தைகளை சிந்திக்க வைப்பதுடன், அவர்களை செயல்படவும் வைக்க வேண்டும்! ஆசிரியரே பள்ளிக்கு தாமதமாக வந்தால் எப்படி? "தூங்காதே தம்பி தூங்காதே" என பாடம் நடத்திவிட்டு வகுப்பில் ஆசிரியர் தூங்கினால் எப்படி? 'கல்வி கற்றுத் தருவோர், ஒளி விளக்குகள் வைத்திருப்போர், மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக" என்றார் சாக்ரடீஸ். ஆசிரியர் எவ்வளவு பிரகாசமாக இருக்கிறாரோ அவ்வளவு பிரகாசமாக மாணவர்கள் விளங்குவார்கள்!

கலைகள் பல கற்கவேண்டும்

பயிர் செழித்து வளர 16 வகையான பேரூட்டச் சத்துக்கள் தேவை. அதுபோல சமூகத்தில் ஆசிரியரும் பல வகையான கலைகளையும் கற்று தேர்ந்திருக்க வேண்டும். காந்த ஊசி எப்போதும் வடக்கு திசையையே காட்டுமாதலால், கடலில் செல்லும் கப்பல்கள் திசைமாறிப் போவதில்லை. ஆசிரியரும் அப்படித்தான். பள்ளிப்பிள்ளைகளுக்கு ஆன்மிக அறிவை ஊட்டி, அறிவியல் அறிவைக் காட்டினால் பிற்காலத்தில் தவறான திசைக்கு செல்ல மாட்டார்கள்.

மனிதனாக்கினாலே போதும்

"கல்வியை அதிகமாக கற்றுக் கொள்ளுங்கள். அதன் கண்ணியத்தையும் கற்றுக் கொள்ளுங்கள்" என்றார் நபிகள் நாயகம். ஆசிரியர்கள் பள்ளிப் பிள்ளைகளிடம் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் ஒரு மாணவனை மகாத்மாவாக்க வேண்டும் என்பதில்லை, அவனை மனிதனாக்கினாலே போதும். காரணம், "கடந்த 15 ஆண்டுகளில் 3 மடங்கு மன அழுத்தம். மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது" என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதை ஆசிரியர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு பாடங்களை நடத்த வேண்டும்.

அஷ்டாவதானி ஆசிரியர்

வாசித்து, பொருள் அறிந்து, அதை மாணவர்கள் மனதில் நிலை நிறுத்துவதே சிறந்த கல்வியாகும். அஷ்டாவதானிகளும், தசாவதானிகளும் பிறந்த நாடு நம் நாடு. இவர்கள் ஒரே நேரத்தில் பலருடைய பற்பல கேள்விகளுக்கும், உடனே பதில் சொல்வார்கள். ஒவ்வொரு ஆசிரியரும் அஷ்டாவதானிகளாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் ஒரு நூறு அஷ்டாவதானிகளை வாழ்நாளில் உருவாக்க முடியும்!

கல்லாமை இருளை போக்குபவர்

"கல்லாமல் இருப்பது பாவத்திற்குரிய செயல்" என்றார் காந்திஜி. எழுத்தறிவு பெற்றவர்கள் கல்லாத இருவருக்கு 'கல்வி' கற்றுத் தர வேண்டும். இதனால் நீங்களும் ஒரு நல்லாசிரியராக ஆகலாம். மேலும் எழுத்தறிவு உலகளவில் சராசரி 84% காட்டிலும், நம் நாட்டின் எழுத்தறிவு சதவீதம் குறைவாகவே உள்ளது. எழுத்தறிவு பெற்றால் கல்லாமை இருளைப் போக்கிக் கொள்ள முடியும்.

ஆசிரியர் குடித்தால்

கணவன் குடித்தால் பாதி வீடுதான் எரியும், மனைவி குடித்தால் முழு வீடும் எரியும், ஆசிரியர் குடித்தால் அந்த ஒரு சமூகமே எரியும். ஆசிரியர்களுக்கு 'குடிப் பழக்கம்' இல்லாமல் இருப்பது நல்லது. நல்லாசிரியர்களால்தான் நல்ல குடிமக்களை

உருவாக்க முடியும். பளிங்குக் கல் அழகிய சிற்பமாவது போல், கல்வியால் நமது அறிவையும், ஆன்மாவையும் சிறப்படையச் செய்ய முடியும். 'பிரபஞ்சம்' போல எப்போதும் விரிந்து கொண்டே இருப்பதுதான் கல்வி. அது எப்படி என்பதை ஆசிரியர்கள் சொல்லித்தர வேண்டும்.

தரமான ஆசிரியர்கள் தேவை

ஏட்டுப் படிப்பு மட்டும் திறமைகளை வளர்த்துவிடாது. அதையும் தாண்டி மாணவர்களிடம் உள்ள ஆற்றல்களை வெளி உலகுக்கு கொண்டு வரவேண்டும். இதற்கு ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது. நாட்டில் கல்வியறிவு உயர்ந்துள்ளது. எனினும் நம் கல்விமுறை, உயர்ந்த குறிக்கோளை இன்னும் எட்ட வில்லை. கல்வி முறையை சீரமைக்க வேண்டும். உலகத் தரமான கல்வியை எதிர்நோக்கும் நாம், அதேபோன்று ஆசிரியர்களை உருவாக்க தவறியதால் தான் தேசிய அளவில் கல்வித் தரத்தில் மிகவும் தாழ்ந்துள்ளோம்.

ஆசிரியர்களுக்கும் தேர்வு தேவை

நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் சுமார் 2½ லட்சம் ஆசிரியர்கள், விஞ்ஞானப் பாடங்கள் போதிக்கிறார்கள் என்றும் அவர்களில் 1½ லட்சம் பேருக்கு விஞ்ஞானத்தைப் பற்றி எதுவுமே தெரியாது என்றும் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விபரக் கணக்கு கூறுகிறது. (நன்றி : மு. அப்பாஸ் மந்திரி, எழுதிய ஒரு வரிச் செய்திகள் இரண்டாயிரம்). பள்ளி மாணவர்களுக்கு பரீட்சை வைப்பது போல, ஆசிரியர்களுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை தேர்வுகள் நடத்தப்படவேண்டும். அப்போதுதான் வீட்டிலும் படிப்பார்கள், நூலகங்களுக்கும் சென்று அறிவை வளர்த்துக் கொள்வார்கள்.

சுற்றுச்சூழல் கல்வி

எல்லாமே கல்வியில்தான் உள்ளது. எனவே, பள்ளிகளில் ஆசிரியர்களின் மனக்குறையை நீக்கி, ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சிகள் தரவேண்டும்! கல்வி அளிப்பதன் மூலம், அவர்களின் அறிவை மேலும் வளர்க்க முடியும். நதியின் தூய்மையைக் கூட 'கல்வி' கற்பதன் மூலம் அகற்ற முடியும்! கங்கை நதியில்

ஓராண்டில் மட்டும் பாதி எரிந்த நிலையில் போடப்படும் மனித சதை மற்றும் எலும்புகளின் எடை 350 டன், சாம்பல் வஸ்துக்கள் ஆண்டுக்கு 10,000 டன் கொட்டப்படுகிறது. சுற்றுச் சூழல் குறித்து ஆரம்பப் பள்ளியிலேயே ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும்.

உயர் கல்வியில் நாம்

உயர் கல்வித் துறையில் புதுமைக்கும், ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் தரவேண்டும். உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்தியாவில் 20 சதவீத மாணவர்கள் மட்டுமே உயர்கல்வி கற்கின்றனர் என வி.ஐ.பி. பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் (13.12.15) தெரிவித்தார். உலக அளவில் கல்வியின் தரம் குறித்து 73 நாடுகளில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அதில் இந்தியா 72வது இடத்தில் உள்ளது. காரணம் தரமான ஆசிரியர்கள் இல்லாததுதான்.

ஆசிரியர்களின் கொள்கை

ஆரம்பக் கல்வியை அதிகம் அலட்சியப்படுத்தக் கூடாது. முகமிழந்து வரும் ஆரம்பக் கல்வியின் முதுகெலும்பை நிமிர்த்த வேண்டும். கல்வி விஷயத்தில் அனைவருக்கும் சமமான கல்வி என்பதைவிட அனைவருக்கும் தரமான கல்வி கிடைத்திட ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும். தரமான கல்வியே அரசின், ஆசிரியரின் கொள்கையாக இருக்கவேண்டும். தரமான கல்வி இருந்தால், பெற்றோர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கி செல்ல மாட்டார்கள்.

மனநல கல்வி

ஒவ்வொருவருக்கும் உடல்நலம், மனநலம் முக்கியம். ஆசிரியர்கள் இது குறித்து மாணவர்களுக்கு சொல்லித் தரவேண்டும். பாடத்தை புன்னகை முகத்தோடு சொல்லித் தர வேண்டும். மன அழுத்தம் ஏற்படாவண்ணம் மாணவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். காரணம், 45 கோடி மக்கள் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைக் குறைப்பது ஆசிரியர் கையில்தான் உள்ளது. தற்கொலை செய்து கொண்டவர்களில் 80 சதவீதம் பேர் படித்தவர்கள்தான் என சென்னை அரசு பொது மருத்துவமனை டாக்டர் எஸ்.எம். சந்திரமோகன்.

சமீபத்தில் இதை தெரிவித்தார். இவர்களில் 1.35 லட்சம் பேர் இந்தியர்கள்.

ஆசிரியர்கள் கடமை

கல்வியின் வேர் கசக்கும். அதன் கனிகள் இனிக்கும். அது எப்படி என்பதை ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு சொல்லித் தரவேண்டும். வீடு மட்டும் அல்ல, ஒரு நாடும் விரும்பிய முன்னேற்றத்தை பெற்றுத் தருவது கல்வியால் மட்டுமே. இதற்கு ஆதாரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். "இந்தியக் கல்வியின் பெரும் சாபக்கேடு புரியாமை என்னும் சுமை" என்றார் புகழ்பெற்ற எழுத்தாளர் ஆர்.கே. நாராயணன். மாநிலங்களவையிலேயே இதை ஒருமுறை தெரிவித்தார். எனவே ஆசிரியர்கள் முதலில் புரிந்து கொண்டு, அதை இன்னும் எளிமையாக குழந்தைகளுக்கு சொல்லித் தர வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.

ஆசிரியரின் கூட்டு முயற்சி - 1

கல்வி என்பது ஒரு கூட்டு முயற்சி. ஒரு குழந்தை வளரும் வரை, தன் பெற்றோரிடம் கல்வி கற்கிறது. அடுத்து, பள்ளியில் ஆசிரியரிடம் கல்வி கற்கிறது. பிறகு வளர்ந்து வாழ்நாள் முழுவதும் பல விஷயங்களை அறிந்துக் கொள்ளும் ஒரு தொடர் நிகழ்வாக கல்வி அமைகிறது. ஆரம்பத்தில் இக்கல்வி அரசு, ஆசிரியர், மாணவர், பெற்றோர் என ஒன்று சேர்ந்தது. ஒரு காருக்கு நான்கு சக்கரம் போல் கல்வி அமைகிறது. இதில் ஒன்று பழுது பட்டாலும் கல்வி பாதிக்கப்படும். அதிலும், இக் கல்வியில் ஆசிரியரின் பங்கு மகத்தானது. காற்றைப் போன்று ஆசிரியர் இருக்கிறார். காற்று இல்லாவிட்டால் வண்டி ஒரு அடி கூட நகராது. அதுபோலத்தான் ஆசிரியர்கள் இல்லாவிட்டால் நாடு ஒரு அடி கூட முன்னேற முடியாது.

ஆசிரியரின் கூட்டு முயற்சி - 2

மாணவர்களை ரோபோக்களாக மாற்றும் வகையில் இருக்கக்கூடாது. ஆசிரியர்கள் தங்கள் சுய விருப்பத்தை மாணவர்கள் மீது திணிக்கக் கூடாது. குழந்தைகள் பிறவியிலேயே எதையும் உன்னிப்பாக கவனித்துக் கொள்ளும் திறனை பெற்றுள்ளனர். அவர்களின் திறனை தூண்டிவிட

வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அவர்களின் ஆற்றலை வளர்க்க அவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். 'மெச்னிகோவ்' என்னும் ரஷ்ய உயிரியல் ஆராய்ச்சியாளர், இவரின் தாயும், தந்தையும் நன்கு படித்தவர்கள் என்பதால் குழந்தைப் பருவத்திலேயே பல திறமைகள் இயல்பாக அமைந்தது. கார்கவ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோது, ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் அங்கு 4 ஆண்டுகால கல்வியை இரண்டே ஆண்டுகளில் படித்து பட்டம் பெற்றார்.

உடற்கல்வி

குழந்தைகளுக்கு கல்வி அவசியம். அதே நேரம் விளையாட்டுக் கல்வியும் அவசியம். அரசுகளும், ஆசிரியர்களும் விளையாட்டுக்கும் முக்கியத்துவம் தர வேண்டும். பள்ளியில் 1 கோடியே 33 லட்சம் மாணவ மாணவிகள் படிக்கின்றனர். 5 லட்சத்து 9 ஆயிரம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்கு 1 சதவீத ஆசிரியர்கள் தான் உள்ளனர். அதனால்தான், நாம் விளையாட்டுத் துறையில் மிகவும் பின் தங்கியுள்ளோம். சொன்னதையயே சொல்லும் கிளிப் பிள்ளையாக ஆசிரியர்கள் இருக்கக்கூடாது. சுயமாக சிந்திக்கும் வண்ணம் சொல்லித் தர வேண்டும்.

எதிரொலிக்கக் கூடாது

தான் வாழும் சமூகத்தை, வாழ்வியல் நெறிமுறைகளைச் சொல்லி பள்ளிப் பிள்ளைகளின் அறிவை ஆசிரியர்கள் விசாலப்படுத்த வேண்டும். கல்வியை திணிக்கக் கூடாது. காரணம், அது மனதில் ஏறாது. இன்றைய கல்விமுறை ரொம்ப எளிது. பள்ளியில் கற்க, மாணவர்கள் ஆசைப்படுகிறார்கள்; அந்த மாணவர்களிடம் கறக்க பள்ளிகள் ஆசைப்படுகின்றன. ஆசிரியர்கள் பாடபுத்தகத்தில் உள்ளதை அப்படியே எதிரொலிக்கக் கூடாது. 'தரமான' கல்வியை வழங்க வேண்டும். "ஒருவனுக்கு அழிவு இல்லாத, செல்வம் கல்வியே ஆகும்" என்கிறார் வள்ளுவர். எனவே, மாணவர்கள் தங்கள் திறமையை, ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கண்கண்ட தெய்வம்

அழகிய நெஞ்சங்களின் இருப்பிடமாக திகழச் செய்வதற்கு மூவரால் மட்டுமே முடியும். அவர்கள் தாய், தந்தை மற்றும் ஆசிரியர்கள். அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்றார்கள். குருவை, அதாவது ஆசிரியரை மூன்றாவதாக வைத்து, தெய்வத்தை நாலாவதாக வைத்தார்கள். நமக்கு கண்கண்ட தெய்வம், "குரு"தான். ஒரு நாட்டின் வாழ்வும், தாழ்வும் ஆசிரியர்களிடம் தான் உள்ளது.

இரண்டாவது பெற்றோர்

பள்ளிக் குழந்தைகளை அடிக்கக் கூடாது, திட்டக் கூடாது. பெங்களூருவில் வீட்டுப் பாடம் செய்யாத பாவனாவை, (7) டியூஷன் ஆசிரியை அடித்த செய்தி, பரபரப்பாக பேசப்பட்டது. குழந்தைகளுக்கு தரக்கூடாத 8 தண்டனைகள், எவை, எவை என ஆசிரியர்கள் மனதில் கொண்டு அவற்றை கடைப்பிடிக்க வேண்டும். ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு 'இரண்டாவது பெற்றோர்' என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடல் மூலம் பாடங்களை நடத்த வேண்டும். அப்போதுதான் பரீட்சையில் தோல்வி அடைய மாட்டார்கள். ஆசிரியர்கள் அரசுக்கு அவ்வப்போது 'கல்வி பற்றிய ஆலோசனைகள் வழங்க வேண்டும். உதாரணமாக இங்கிலாந்தில் தேர்வுகளற்ற கல்வி திட்டத்தை அமல்படுத்தியுள்ளார்கள்! நல்ல சூழ்நிலையை குழந்தைகளுக்கு உருவாக்கித் தந்தால் நாளை அவர்கள் வாழ்வில் இமயம் போல் உயர்ந்து நிற்பார்கள்!

உயர்ந்த லட்சியம்

உலக அளவில் பணக்கார 10 நாடுகளின் பட்டியலில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. மகிழ்ச்சியான விஷயம். ஆனால் அதே நேரம் இந்தியாவில் 'தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் பார்த்தால் சராசரியாக இந்தியர்கள் மிகவும் வறுமையில் உள்ளனர்' என நியூ வேர்ல்டு வெல்த் என்ற ஆய்வு குறிப்பிட்டுள்ளது. மாநில அரசுகள், மத்திய அரசு நினைத்தால் மக்களின் வறுமையை ஒழிக்க முடியும். அதைவிட ஆசிரியர்கள் நினைத்தால், அனைவருக்கும் தரமான கல்வியை தந்து

ஒவ்வொரு மாணவனையும், மாணவியையும் கல்வி மூலம் முன்னேற செய்ய முடியும். உயர்ந்த லட்சியம் இருந்தால் வீட்டையும் நாட்டையும் உயர்த்த முடியும்.

தூண்டுகோல்

சென்னையைச் சேர்ந்த மாணவி 'சத்தியா காவின்' மாநில அளவில் 2016-ஆம் ஆண்டு 1195 மதிப்பெண் பெற்று சாதனைப் படைத்துள்ளார். அதேபோல் பிளஸ் 2 பொதுத் தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடம் பிடித்த மாணவி வேணு பிரீத்தாவின் லட்சியம் மருத்துவம் பயின்று ஐ.ஏ.எஸ். ஆவதே என்றார். உயர்ந்த பதவியில் அமர்த்தும் வண்ணம் அவர்களுக்கு ஆசிரியர்கள் தூண்டுகோலாக இருக்கவேண்டும்.

ஊக்கம் தந்த ஆசிரியர்

"வெளியில் உள்ள வறுமையை விட மனதில் உள்ள வறுமையே அபாயமானது" என்றார் டாக்டர் ராதாகிருஷ்ணன். ஏழையாக இருந்தாலும், வறுமையில் வாடினாலும், உயர்ந்த லட்சியத்துடன் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். கணித மேதை இராமானுஜம், அமெரிக்க அதிபர் ஆப்ரகாம் லிங்கன் போன்றோர் கரும் பலகை வாங்கக்கூட காசு இல்லாததால் மணலில், மண் வெட்டியில் எழுதிதான் முன்னேறினார்கள். விடுமுறை நாட்களை வீணாக்காமல் ஏழை மாணவன் ஈரோடு ரோஷன், 69 செஸ் போட்டிகளில் பங்கேற்று, ஆசிய அளவில் சாதனை படைத்துள்ளார். இதற்கு ஊக்கம் தந்தவர் ஆசிரியர்தான்.

ஆசிரியர் ஒரு மாணவர்

ஆசிரியர்கள் நினைத்தால் பல 'சாதனைக் குடும்பங்களை' உருவாக்க முடியும். ஆசிரியர்களின் ஊக்கத்தால் பிளஸ் 2 தேர்வில், மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றார் பார்வைத்திறன் இல்லாத மாணவி சந்தியா. ஆசிரியர்கள் ஏதாவது ஒன்றில் முயற்சி செய்துக்கொண்டே இருக்க வேண்டும். கற்பதால் ஆசிரியர்களும் ஒரு மாணவர்தான். உ.பி. பக்ராபாத், பூர்வ மத்தியாமிக் வித்தியாலயா பள்ளித் தலைமை ஆசிரியர் ராம் லக்கான் (59) இண்டர் மீடியேட் (12-ஆம் வகுப்பு) தேர்வை கஜினி முகமதுபோல 18வது முறையாக எழுதியுள்ளார்.

தரமான ஆசிரியர்கள்

காஞ்சியில் உள்ள பிர்லா தொழில் நுட்ப நிலையத்தின் 26வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு தலைவர் பேசும்போது "தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை தரமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்" என்றார். தரமான ஆசிரியர்களால் மட்டுமே தரமாக கல்வியைத் தரமுடியும். திருவாடானை அருகே, ஒரு அரசு தொடக்கப் பள்ளியில் தரமான ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், அந்த அரசுப் பள்ளி இழுத்து மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இரு நூலகம்

ஆசிரியர்கள் கற்பிப்பதில் தவறு இல்லை, 'கடனே' என்று பள்ளிப் பிள்ளைகளுக்கு கற்பிப்பது தான் தவறு. "புத்தகங்களோடு வாழ்வதை விட பெரிய பாக்கியம் இல்லை". எனவே நேரம் கிடைக்கும்போது ஆசிரியர்கள் தங்கள் அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். 'நூலகம்' என்பது ஆடம்பரம் அல்ல, வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று' என்றார். அமெரிக்க சீர்திருத்தவாதி ஹென்றி வார்டு டீச்சர். அந்த வகையில் ஒவ்வொரு ஆசிரியர் வீட்டிலும் இரண்டு நூலகம் இருக்கவேண்டும். ஒன்று உங்களுக்கு, இன்னொன்று பள்ளிப் பிள்ளைகளுக்கானது.

பெரும் தீபம்

எதுவும் சும்மா கிடைக்காது. கார்ல் மார்க்ஸ் 'மூலதனம்' என்ற நூலை எழுத 1586 நூல்களைப் படித்துத்தான் புதுத் தத்துவம் படைத்தார். ஒரு தீபம் மற்றொரு தீபத்தை ஏற்றப் பயன்படுகிறது. ஆசிரியர் என்ற பெரும் தீபம், ஒரு லட்சம் புதிய தீபங்களை ஏற்ற பாடுபடவேண்டும். குழந்தைகளின், கல்வித் தரம், அதை போதிக்கும் நல்லாசிரியர்களைப் பொருத்தது.

மேதைகளை உருவாக்குங்கள்

நதியை கடக்க பாலம் வேண்டும். நாட்டை செழிப்பாக்க நல்லாசிரியர்கள் வேண்டும். ஆசிரியர்களுக்கு விரிவான பயிற்சிகள் அளிக்க வேண்டும். "நாட்டில் 90 சதவித

இந்தியர்கள் முட்டாள்கள்" என்று 2012 டிசம்பர் 9ஆம் தேதி பிரஸ் கவுன்சில் தலைவர் நீதிபதி 'மார்க்கண்டேய கட்ஜு' தெரிவித்தார். இதில் உண்மை இல்லாமல் இல்லை. முட்டாள்களை மேதைகளாக்கும் வல்லமை பள்ளி ஆசிரியர்களிடம், நூலாசிரியர்களிடம் மட்டுமே உள்ளது. மனிதசமுதாயத்தின் முன்னேற்றம் அவர்கள் கற்ற கல்வியால் மட்டுமே சாத்தியப்படும். எனவே, அரசும், ஆசிரியர்களும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு மக்கள் அனைவருக்கும் கல்வியை தந்து உதவ வேண்டும்.

திறமையான ஆசிரியர்கள்

யுனெஸ்கோ புள்ளி விவரப்படி, கல்வியறிவு இல்லாதவர்கள் பட்டியலில் இந்தியா 105வது இடத்தில் இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக 100ஆவது இடத்தில் இருந்த இந்தியா, மேலும் பின் தங்கி மீண்டும் 105-வது இடத்திற்கு சென்றுவிட்டது. இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் தரமான ஆசிரியர்கள் இல்லாதது. அடுத்து தேவையான ஆசிரியர்கள் நியமிக்காதது தான். கல்வி என்பது ஒருவரிடம் உள்ள திறமையை வெளிப் படுத்துவதே, உண்மையான கல்வி. எனவே, முதலில் ஆசிரியர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களால் திறமையான மாணவர்களை உருவாக்க முடியும்.

வெளிச்சத்திற்கு வாருங்கள்

ஆசிரியர்கள் கூடுதல் நேரம் எடுத்து சொல்லித் தரவேண்டும். 'பத்திரிகை' என்பது மக்களின் பல்கலைக்கழகம்' ஓய்வு நேரத்தையும், படிப்புக்காக செலவிட வேண்டும். காரணம் சராசரி 10.7 மணி நேரத்தை ஒரு வாரத்தில் வாசிப்புக்காக இந்தியர்கள் செலவிடுகிறார்களாம். (தி. இந்து 3.6.16) ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் படிக்க வேண்டும் என்ற 'எண்ணம்' உள்ளவர்கள் 10ஆம் வகுப்பு படிக்கும்போது திட்டமிட்டு தினம் கூடுதலாக ஒரு மணி நேரத்தை இதற்கு ஒதுக்கி படிக்க வேண்டும். மாணவர்களை 'கல்வி' கனவு வெளிச்சத்திற்கு கொண்டு வர பத்திரிக்கைகளும், ஆசிரியர்களும் பெரும் அக்கறை கொண்டுள்ளார்.

ஐ.ஏ.எஸ்-க்கு ஆசிரியர்கள்

டெல்லியை தமிழ்நாட்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கைப்பற்றுவார்கள் என நம்புவோம். இதற்காக ஐ.ஏ.எஸ் தேர்வுக்குப் பயிற்சி அளிக்க 'தி இந்து' நாளிதழ் முன் வந்துள்ளது. படித்த இளைஞர்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒன்றுபட்ட பஞ்சாபின் ஒப்பற்ற தலைவராக பிரதாப் சிங் கைரோன் விளங்கினார். டில்லிக்கு இது பிடிக்கவில்லை. சர்வாதிகாரி என்று கருதப்பட்டாலும் நேருவால் மிகவும் மதிக்கப்பட்ட முதல்வர். பல நல்ல திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்பினாலும் அங்குள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இவர் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்டனர்.

கூடுதல் ஆசிரியர்கள்

'முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்' என எண்ணினார் கைரோன். டெல்லியைக் கைப்பற்றுவது என சபதம் எடுத்தார். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த உத்திதான் பஞ்சாப் மாணவர்களை ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு ஆயத்தப்படுத்துவது. அதற்காக ஒவ்வொரு கல்லூரியிலும், ஐ.ஏ.எஸ். ஆயத்த வகுப்புகள் நடத்த கூடுதல் ஆசிரியர்கள் பணியிடங்களை உருவாக்கினார். விளைவு டெல்லி தலைமைச் செயலகம் மட்டுமின்றி நாடு முழுவதும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கோலோச்சுவதை இன்றும் காணலாம். அதே உத்தியைத்தான் இன்று இங்கு கடைப்பிடிக்கிறது. பஞ்சாப்புக்கு அடுத்து தமிழ்நாட்டில் அதிக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் காணவேண்டும். தொலைநோக்கோடு செயல்பட்ட கைரோன் போல கிங்மேக்கர்ஸ் ஐ.ஏ.எஸ். 'தி இந்து' செயல்படுவதை கைதட்டி பாராட்டுவோம்.

ஆசிரியர்களுக்கு பாத பூஜை

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்பார்கள். 2016 ஆகஸ்டு மாதம், சென்னை மீனம்பாக்கம் பள்ளியில் சுமார் 1008 தமிழாசிரியர்களுக்கு பள்ளி மாணவர்கள் பாதபூஜை செய்த காட்சி இன்றும் என் கண்முன் தெரிகிறது. பெற்ற அப்பா, அம்மாவுக்குக் கூட கிடைக்காத பாக்கியம் இது. எனவே, இதை

உணர்ந்து கல்வியை, தரவேண்டும். பிரெஞ்சு அதிபர் ரூட்ஸாவை 'கல்வியின் தந்தை' என அந்நாட்டு மக்கள் கொண்டாடுகிறார்கள். குழந்தைக்கு ஆசிரியர் இரண்டாவது தந்தை.

பொறுப்புள்ள சமுதாயம்

நெட்ருக்கல்வி, படைப்பாற்றலை உருவாக்காது. நாளை என்ன பாடம் நடத்த வேண்டும்? என்பதை ஆசிரியர்கள் இரவில் அமர்ந்து படித்துவிட்டு வகுப்பில் போதிக்க வேண்டும். கல்வியே ஆன்மாவின் உணவு. எனவே அதை திணிக்கக் கூடாது. ஊட்ட வேண்டும். பொறுப்புள்ள சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர்களால் மட்டும்தான் முடியும் 'குடும்பக் கல்வியை' யும், ஆசிரியர்கள் சொல்லித் தர வேண்டும். காரணம் குடும்பங்கள் சிதைந்தால் பாரதமே சிதையும். கலாசாரத்தில், பண்பாட்டில், நம் நாடு இமயம் போல் இன்றும் உயர்ந்து நிற்பதற்கு காரணம் சான்றோர்களின், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு தான், என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர் உழைப்பு

எந்த சாதனைக்கும் உழைப்பு அவசியம். அதிலும் ஆசிரியர்கள் உழைப்பு மகத்தானது. ஆசிரியர்கள் இதை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். காரணம், நீங்கள் கொடுக்கும் இந்த 12 ஆண்டு கல்விதான் மாணவர்களின் மீதியுள்ள 40 ஆண்டை, சிறப்பாக அமைய வழிவகுக்கிறது.

முதல் ஆசிரியர் - தாய்

கல்வித்துறையில், ஆசிரியர்களை திறமையின் அடிப்படையில் நியமிக்க வேண்டும். பண அடிப்படையில் நியமிக்கும் வரை கல்வியின் தரம் என்பது தாழ்ந்து தான் இருக்கும். கட்டாயத்தினால் செய்யப்பட்ட 'உடற்கல்வி' மனதை ஒன்று செய்யாது. ஆனால், கட்டாயத்தினால் 'கல்வி'யை ஆசிரியர் புகட்டினால் அது, பள்ளிக் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தைக் கொடுக்கும். ஒரு தாய் நூறு ஆசிரியர்களுக்கு சமம். தாய் தன் குழந்தைக்கு கண்ணை விளக்காக்குகிறாள், கையை தொட்டிலாக்குகிறாள். ரத்தத்தைப் பாலாக்குகிறாள். குழந்தை அழும்போது எதற்காக அழுகிறது

என்பதை அறிந்து அதற்கு ஏற்ப சமயோசிதமாக செயல்படுகிறாள். எனவே உலகில் முதல் சிறந்த ஆசிரியர் தாய் தான்!

நீதிபோதனைக் கல்வி

'கல்வி'யின் முக்கியத்துவத்தை, ஆசிரியர்கள் சொல்லித்தர வேண்டும். கல்வியின் சிறப்பு - பணிவு, பிறருக்கு உதவுதல், உண்மையாக நடந்துக் கொள்ளுதல், எல்லோரிடமும் அன்புடன் பழகுதல் ஆகும். வாழ்க்கைப் பிரச்னைகளை சமாளிக்க உதவும் திறனே கல்வியின் சிறப்பு. வாழ்க்கைக்கு பயிற்சி பெறுவதே சிறந்த 'கல்வி' யாகும். இதை ஆசிரியர்கள் புரிந்து கொண்டு பள்ளிப் பாடங்களுடன் நீதி போதனைகளையும் விளக்கமாக சொல்லித் தர வேண்டும்.

நடு இரவிலும் படிப்பு

'ஆசிரியர்கள்' என்றும் ஆசிரியர்கள் தான்! அது பள்ளியோடு முடிந்து விடுவதில்லை. தொடர்ந்து தினமும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும்! அமெரிக்க ஜனாதிபதியாகப் பணியாற்றிய ரூஸ்வெல்ட், நீதிபதி ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் வீட்டிற்கு 'தான் ஜனாபதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதை தெரிவிக்க அவர் வீட்டிற்கு சென்றார். அந்த நடுஇரவிலும் 'பிளேட்டோ' எழுதிய 'தத்துவ சாஸ்திரத்தை' படித்துக் கொண்டிருந்தார். "இந்த தள்ளாத வயதில்' இந்த நூலை ஏன் படிக்கிறீர்கள்?" என கேட்டதற்கு வெண்டல் புன்னகையுடன் "என் அறிவை வளர்த்துக் கொள்வதற்கு" என்றாராம். அப்போது அவருக்கு வயது 96.

எளிமையான ஆசிரியர்

ஆசிரியர்கள் கற்பிப்பதை ஒரு பெரும் தொண்டாகவும், சேவையாகவும் செய்ய வேண்டும். ஆசிரியர்களின் முதல் பாடம் எளிமை!

செல்வத்தை நினைத்து வாழ்ந்த திருவெண்காடருக்கு பெருமையில்லை. துறவு கொண்டு எளிமையாக வாழ்ந்த பட்டினத்தாருக்குத் தான் பெருமை! கோட்டும், சூட்டும் அணிந்த 'மோகன்தாஸ்' கரம்சந்த் காந்தியை விட முழங்கால்

வரை மட்டுமே வேட்டி அணிந்த அண்ணல் காந்தியடிகளுக்குத் தான் அதிக பெருமை, என்றும் எளிமையே பெருமை!

சுதந்திரம் இல்லை

படித்த மாணவர்கள் எந்தத் துறைக்குச் செல்லப் போகிறார்கள் என கேட்டுப் பாருங்கள். மருத்துவம், பொறியியல் என்றுதான் கூறுவார்கள். ஆனால், யாரும் 'ஆசிரியராகப் போகிறேன்' எனக் கூற மாட்டார்கள். இதிலிருந்தே ஆசிரியப் பணி எத்தனை கடுமையானது என உணரலாம். மேலும் இன்றைய காலகட்டத்தில், மேற்கத்திய கல்விச் சூழலில் ஆசிரியர்களுடைய நிலை மிகவும் மோசமாகவும், கவலைக்குரியதாகவும் இருக்கிறது. கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சுதந்திரம் ஆசிரியர்களுக்கு இல்லை.

ஆணிவேர்

சமுதாயம் நன்றாக உருவாக, நல்லாசிரியர்கள் உருவாக வேண்டும். உறவுகளில் புனிதமான உறவு ஆசிரியர் மாணவர் உறவுதான். மனிதனை மாமனிதனாக்குவது ஆசிரியர்தான். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பார்கள். அப்படிப்பட்ட குடும்பம், சமூகம் என எல்லாவற்றுக்குமே அடிப்படையாக, ஆணிவேராக இருப்பவர்கள் ஆசிரியர்களே!

ஒழுக்க கல்வியை கற்பியுங்கள்

'சிந்திக்காத மக்களைக் கொண்டுள்ள தேசம் வெறும் சதைப் பிண்டங்களால்தான் நிரம்பி வழியும்' என்றார் விவேகானந்தர். இன்றைக்கு தேவை கல்வி மட்டுமல்ல, கல்வியுடன் கூடிய ஒழுக்கமே! இக்கல்வி உள்ளொளியை பெருக்கி மனத் தடைகளை அகற்றவல்லது! ஊரார் ஒன்றுகூடி தேர் இழுப்பது போல அரசு, ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் என நால்வரும் ஒழுங்காக ஓடும் ஒரு காரின் நான்கு சக்கரங்கள் போன்றவர்கள். இதில் ஒன்று பழுதுபட்டாலும் 'ஒழுக்கக்கல்வி' எனும் இலக்கை எளிதில் எட்ட முடியாது.

நாட்டுக்குத் தேவை நல்லாசிரியர்கள்

கடலுக்கு கரையுண்டு, கல்விக்கு கரையில்லை. ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு ஆர்வமுடன் சொல்லித் தரவேண்டும்

ஆச்சியர்களின் அச்சுறுத்தல், அதிகப்படியான கண்டிப்பும் மாணவர்களின் மனதை, உடலைப் பாதிப்படையச்செய்யும். இன்றைக்கு தேவை பள்ளி ஆசிரியர்கள் அல்ல, நல்லாசிரியர்கள். 2014 ஆம் ஆண்டுக்கான நல்லாசிரியர் விருது வழங்கும் விழா டெல்லி விக்யான் பவனில் குடியரசு தலைவர் பரிசுகள் வழங்கி பேசும்போது, "குழந்தைகளுக்கு நன்னெறிகளை போதிக்கும் ஆசிரியர்கள் தேவை. சகிப்புத் தன்மை, பன்முகத் தன்மை, ஒழுக்கம், கருணை உள்ளிட்டவை போதிக்கும் ஆசிரியர்களே நாட்டுக்கு தேவை" என்றார்.

ஆசிரியர் - தொழில் வல்ல தொண்டு

அன்று ஆசிரியர்கள் தெய்வமாகப் போற்றப்பட்டனர். கல்வியைக் கற்றுத் தரும் 'குருவை' தெய்வமாக மதித்தோம். ஆசிரியர் தெய்வமாக உருவாக்கப்பட்டால்தான் அறக்கல்வியை மாணவர்கள் உள்வாங்க முடியும். ஆசிரியரும் அறிவுத் திறனுடனும் தன் பணியை இனிதே ஆற்ற முடியும். ஆசிரியர் தொழில் அல்ல. அது நாளைய தலைமுறையினரை உருவாக்குகிற ஒரு தொண்டு!

படைப்பாளிகளை உருவாக்குங்கள்

விதை நெல் நன்றாக இருந்தால்தான் தகுதி வாய்ந்த விளைச்சல் அமோகமாக இருக்கும். அதுபோல தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்தால் தான் தரமான கல்வியை வழங்க முடியும். கல்வியில் காலத்திற்கேற்ப சீர்திருத்தங்களை அரசும், ஆசிரியர்களும் இணைந்து கொண்டு வரவேண்டும். 20 கிலோ புத்தக சுமையை இன்னமும் மாணவர்கள் முதுகில் சுமக்க வேண்டுமா? 'தூய்மை இந்தியா' பற்றி குழந்தை பருவத்திலேயே சொல்லித் தரவேண்டும். படிப்பாளிகளை விடவும் படைப்பாளி களை உருவாக்க வேண்டும். இதுவே ஆசிரியர்களின் முதல் கடமையாகக் கொள்ள வேண்டும்.

கோபம் கூடாது

விளையாட்டாக புகட்ட வேண்டிய கல்வியை, சில ஆசிரியர்கள் விஷம் போல் ஊட்டுவதால் மாணவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது. விஷம் சில நேரம் அருமருந்தாகலாம்.

ஆனால் விஷமே மருந்தென்று நாம் வீழ்ந்து விடலாமா? கடுகடுப்பு, கோபம், வெறுப்பு சில நேரம் மட்டும் மாணவர்கள் மீது காட்டலாம்.

அப்படி இருக்கக்கூடாது. சிறிய விஷயத்திலும் கவனம் தேவை. கப்பலின் அடித் தளத்தில் விழும் ஒரு சிறு ஓட்டை ஒரு பெரிய கப்பலையே மூழ்கடித்து விடும். அதுபோல ஆசிரியர்களின் சிறு செயல்கூட மாணவர்களின் மனதை பாதிக்கும். சிறிய விஷயத்திலும்கூட, கவனமாக இருக்க வேண்டும். செருப்புக்குள்ளே சிறு கல்லும், காதுக்குள்ளே சிறு எலும்பும், கண்ணுக்குள்ளே சிறு தூசியும், காலில் முள்ளும் அளவில் சிறியதாயினும் அதிக துன்பத்தைத் தரும்.

ஆசிரியர்கள் பாக்கியவான்

ஒவ்வொரு ஆசிரியரும் அரிஸ்டாட்டில் போல் பாடம் நடத்த வேண்டும். பிளேட்டோவின் மாணவன் தான் அரிஸ்டாட்டில். பிலிப்ஸின் மகன், அலெக்ஸாண்டர், தன் மகனை மாவீரனாக, ஒழுக்கமுள்ளவனாக வர வேண்டும் என்பதற்காக அலெக்ஸாண்டரை, அரிஸ்டாட்டிலிடம் கல்வி பயில அனுப்பி வைத்தார். பிலிப்ஸ் தன் மகன் வீரனாகவும் மட்டுமல்ல. விவேகமுள்ளவனாகவும் வரவேண்டும் என கேட்டுக் கொண்டார். "உங்கள் காலத்தில் என் மகன் பிறந்தது நான் செய்த பாக்கியம்" என்றாராம். ஆசிரியர்களும் பாக்கியவன்களாக மாறலாமே!

சுகாதாரத்தை சொல்லித் தாருங்கள்

ஒரு நாடு அனைத்து துறைகளிலும் முன்னேறி வளர்ச்சி கண்டிருக்கிறது என்றால் அதற்கு மூலக்காரணம் ஆசிரியர்களின் கற்பித்த திறன்தான். ஆம், கல்வித் தரம் (Quality of Education) சிறப்புற்று இருக்க முதல் காரணகர்த்தா ஆசிரியர்கள்தான். கல்வியின் உயர்ந்த நோக்கம் மாணவர்களை சிந்திக்கத் தூண்டுவதேயாகும். கல்வியின் முதல் நோக்கம் ஆரோக்கியம் அதனால்தான ஏப்ரல் 7ஆம் தேதியை உலக சுகாதார தினமாக கொண்டாடி வருகிறார்கள். சுகாதாரத்தை எப்படி பராமரிக்க வேண்டும்? என்பதை குழந்தைகளுக்கு ஆசிரியர் கற்பிக்க வேண்டும்.

ஆசிரியர் சுஸ்ருதா

சுத்தம், சுகாதாரத்தின் முன்னோடி நாம்தான். இந்தியாவில் மொத்தம் 403 வகைக் கொசுக்கள் உள்ளன. யானைக்கால் நோய் 2600 ஆண்டுகளுக்கு முன்பே இருந்துள்ளது. இந்திய மருத்துவர் 'சுஸ்ருதா' என்பவரால் கண்டறியப்பட்டது. இவர் சிறந்த ஆசிரியராகவும் இருந்ததால்தான் மக்கள் அக்காலத்தில் நோய் இன்றி ஆரோக்கயமாக வாழ்ந்துள்ளனர். கல்வி என்பது தனி மனிதனின் சமூக அந்தஸ்தை உயர்த்தி விடும். தாங்கள் ஏணி என்பதை உணர்ந்து ஆசிரியர்கள் தரமான கல்வியை தரவேண்டும்.

ஆசிரியர்களை வணங்குகிறோம்

தெய்வங்கள் ஒருவனை வெறுத்தால், அவன் பள்ளிக்கூட ஆசிரியன் ஆவான் என்று ஒரு சீனப் பழமொழி கூறுகிறது. ஒரு பெரியவர், "உங்களைப் பார்க்கும் போதெல்லாம், வெறும் ஆசிரியராகப் பார்ப்பதில்லை. எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்கித் தருபவராகப் பார்க்கிறோம். அதனால்தான் வணங்குகிறோம்" என்று 80 வயது பெரியவர், ஒரு பள்ளி ஆசிரியரைப் பார்த்து சொன்னதுதான் இது.

நோபல் பரிசு பெற உதவிய ஆசிரியர்கள்

ஒரு நாட்டை ஒளிமயமானதாக, ஆசிரியரால் உருவாக்கி தர முடியும். மரியா கோப்பெர்ட் மெயர், தற்போதைய, போலந்தில் பிறந்தவர். தந்தை கோட்டின் 'ஜென்' பல்கலைக்கழகப் பேராசிரியர். அதனால் மரியா கணித வல்லுநராக ஆனார். கல்லூரியில் மேக்ஸ் பார்ன், ஜேம்ஸ் பிராங்க் உள்ளிட்ட நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர்களுக்கு ஆசிரியராக அமைந்ததால், இவர்கள் நோபல் பரிசு பெற மிகப் பெரிய பலமாக அமைந்தார். அதேபோல சர். சி.வி.ராமன், தான் நோபல் பரிசு பெற்றதுடன் தன் மாணவர்களில் இருவர் நோபல் பரிசு பெறவும் காரணமாக இருந்தார்.

கற்றுத்தாருங்கள்

ஆசிரியர்கள் ஒழுக்கம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றுக்கு இலக்கணமாக இருக்க வேண்டும். 2017 ஏப்ரல்